

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு தயாரிக்கப்பட்ட உணவின் தரத்தினை சுவைத்து பார்த்து ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு உணவருந்த வந்த நபர்களிடம் உணவின் சுவை மற்றும் தரம் குறித்து கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.7.2024) சென்னை மாநகராட்சி 122ஆவது வார்டில் உள்ள தேனாம்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் உள்ளார்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சம் நிதி!

## முதல்வரின் உத்தரவிற்கிணங்க அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை, ஜூலை 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன் தினம் (18.07.2024) அவர்களது குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக்குடி அருகில் 17.07.2024 அன்று கந்தர்வ கோட்டையில் இருந்து சமயபுரம் கோவிலுக்கு பாத யாத்திரையாக சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராதவிதமாக ஈச்சர் வாகனம் மோதிய விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக் கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டியைச் சேர்ந்த முத்துசாமி (வயது 60), திருமதி. ராணி (வயது 37), திருமதி. மோகனாம்பாள் (வயது 27), திருமதி. மீனா (வயது 26) மற்றும் திருமதி. தனலட்சுமி (வயது 36) ஆகிய 5 நபர்கள் உயிரிழந்தனர்.

மேலும் இவ்விபத்தில், பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருமதி. சங்கீதா என்பவர் அனுமதிக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் முதலமைச்சர் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் பலத்த காயமடைந்தவரின் குடும்பத்தினர்களை நேற்று முன்தினம் (18.07.2024) நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, வட்டாட்சியர் திருமதி.விஜயலட்சுமி, மங்களாபுரம் ஊராட்சிமன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### கடந்த நிதி ஆண்டினைக் காட்டிலும் நடப்பாண்டில்

# பதிவுத்துறையில் வருவாய் ரூ.821 கோடி அதிகரிப்பு!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தகவல்!

சென்னை,ஜூலை 20 -

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் போது பதிவுத்துறையில் பணியின் போது மறைவுற்ற இரண்டு பணியாளர்களின் வாரிசுதார்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

பதிவுத்துறையில் நிகழும் நிதி ஆண்டில் (2024-2025) (17.07.2024) வரை ரூ.5,920 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதி ஆண்டின் வருவாய் உடன் ஒப்பிடுகையில் ரூ.821 கோடி அதிகம் ஆகும்.

அமைச்சர் அவர்களின் கடந்த ஆலோசனை கூட்ட அறிவுறுத்தலைத் தொடர்ந்து, அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் அங்கீகாரமற்ற மனைப்பிரிவை பதிவு செய்த அலுவலர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தொடர்ந்து அங்கீகாரமற்ற மனைப்பிரிவை பதிவுசெய்யும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு திடீர் ஆய்வு செய்து பதிவுக்கு வரும் பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் ஆவணம் பதிவு செய்தல், ஆவணங்களை உரிய நேரத்தில் ஒப்படைத்தல், போலி மற்றும் அங்கீகாரமற்ற மனைப்பிரிவு பதிவுகளை தடுத்தல் உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அறிவுறுத்தினார்.

### 97 சதவிகிதம் பேருக்கு 3 வேளையும் உணவு!

# உணவு பாதுகாப்புத் துறையிலும் தமிழ்நாடு முன்னிலை!

## பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் 31 சதவிகிதம் பேருக்கே 3 வேளையும் உணவு!

புதுடெல்லி, ஜூலை 20 -

நாட்டில் 50 சதவீத மக்களுக்கு மட்டுமே 3 வேளையும் உணவு கிடைப்பதாக 21 மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டில் 97 விழுக்காட்டினருக்கு 3 வேளையும் உணவு கிடைப்பதாகவும் பா.ஜ.க. ஆளும் குஜராத், ராஜஸ்தானில் வெறும் 31 விழுக்காட்டினருக்கு மட்டுமே 3 வேளையும் உணவு கிடைப்பது அம்பலமாகியுள்ளது.

140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் பல கோடி பேர் வறுமைக் கோட்டில் இருந்து மீண்டு விட்டதாக ஒன்றிய அரசு கூறிவரும் நிலையில், நாட்டில் கிட்டத்தட்ட சரிபாதி மக்களுக்கு 3 வேளையும் உணவு கூட கிடைக்காத நிலை நீடிக்கவே செய்கிறது.

இந்நிலையில், ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர், பெரும் பணக்காரர்கள் என அனைத்து தரப்பு மக்களிடமும் நடத்தப்பட்ட ஆய்வில் நாட்டில் 44% மக்களுக்கு 3 வேளையும் உணவு கிடைக்காத அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது. அதே வேளையில் மாநில அளவில் கணக்கிடும்போது இந்த எண்ணிக்கை வேறுமாதிரியாக உள்ளது.

நாடு முழுவதும் 21 மிக முக்கியமான மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவில் நாட்டிலேயே தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் மட்டுமே ஏழைகள், நடுத்தர குடும்பம், பணக்காரர்கள் என அனைத்து தரப்பிலும் 98 விழுக்காட்டினருக்கு 3 வேளையும் உணவு கிடைக்கிறது.

இந்த பட்டியலில் மோடியின் சொந்த மாநிலமான குஜராத் கடைசி இடத்தில் உள்ளது. இதே போன்று, பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும் கடைசி 5 இடத்தில் உள்ளன. சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மிக ஏழ்மையான குடும்பங்களை பொறுத்தவரை தமிழ்நாட்டில் 97%, கேரளாவில் 98% பேருக்கு 3 வேளையும் உணவு கிடக்கிறது.

ஆனால் உத்தரப் பிரதேசத்தில் 41%, மத்தியப் பிரதேசத்தில் 39%, மகாராஷ்ட்ரா 34%, ராஜஸ்தானில் 34%, குஜராத்தில் 33% ஏழைகளுக்கு மட்டுமே 3 வேளை உணவு கிடைக்கிறது. பல்வேறு துறைகளில் நாட்டிற்கே முன்னோடியாக இருக்கும் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையிலும் முன்னணியில் இருப்பது ஆய்வு முடிவில் உறுதியாகி இருக்கிறது.

அதேநேரம், மோடியின் குஜராத்தில் 31 விழுக்காட்டினருக்கு மட்டுமே 3 வேளையும் உணவு கிடைப்பது அம்பலமாகியுள்ளது.

### ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் 3 குற்றவியல் சட்டத் திருத்தங்களை எதிர்த்து

# தென் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் கருத்தரங்கம்!

## நெல்லை கிழக்கு மாவட்டச்செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை, ஜூலை 20 -

நெல்லை பாளையங் கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் 27.7.2024 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தென் மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி சார்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் 17.7.2024 அன்று நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி அரசியலமைப் பிற்கு எதிரான,ஜனநாயகத்திற்கு விரோதமான,ஒன்றிய பா.ஜ.க அரசு அமல்படுத்தியுள்ள மூன்று குற்றவியல் சட்ட திருத்தங்களை திரும்ப பெற வலியுறுத்தி வருகின்ற 27.7.2024 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் பாளையங் கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் தென் மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி சார்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இது தொடர்பான முன்னேற்பாடுகள், பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கான மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,நீதிமன்ற அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகவழக்கறிஞர்கள்ஆலோசனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வசூடா மணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், கிழக்கு மாவட்ட வழக்கறிஞரணி தலைவர் சாமுவேல் பாஸ்கர்ராஜ், துணை அமைப்பாளர்கள் தவசிராஜன், ராஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர் வி.வி.ராமச்சந்திரன், வழக்கறிஞர்கள் முத்துகிருஷ்ணன், திருமலைக்குமார், பாலசந்தர்,சந்திரசேகர், செல்வராஜ், மீனாட்சிநாதன், காஜாமைதீன், கௌரி, அணிராஜ், ஜேம்ஸ்பால், பிராங்க்ளின், செந்தில்குமார், ஆறுமுகம்,இசக்கிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

நாற்பதும் நமதே, நாடும் நமதே என்ற வெற்றி முழக்கத்தை முன்னிறுத்தி தேர்தல் காலத்திற்கு முன்பாக இருந்தே முழுமையான வெற்றிக்காக வியூகங்களை வகுத்து அதனை முறைப்படுத்துதல் வகையில் பாக முகவர் கூட்டம்,வாக்காளர் பட்டியல் சரிப்பார்க்கும் பணி எனத் தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டு 40 தொகுதிகளிலும் இந்திய அரசியல் கட்சிகள் வியக்கும் வண்ணம் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வாக்காளர்களை சந்தித்து வாக்கு சேகரித்து 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும்,கழக இளைஞர் அணி செயலாளர்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், இக்கூட்டம் மனமார்ந்த நன்றிகளையும்,பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 10.7.2024 அன்று நடைபெற்ற விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்த விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்,இந்த வெற்றிக்கு கழக நிர்வாகிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி வெற்றி வியூகத்தை அமைத்துக் கொடுத்த முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கும், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் சுற்றி,சுற்றி பிரச்சாரம் செய்து கழகத்தை வெற்றிபெற வைத்த தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன்மற்றும்விளையாட்டுத் மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், கழகத்தின் வருங்கால வைப்புநிதி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும். இக்கூட்டம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 19.4.2024 அன்று நடைபெற்ற திருநெல்வேலி நாடாளுமன்ற பொது தேர்தலில் கழக நிர்வாகிகளோடு ஒன்றாக இணைந்து சிறப்புற தேர்தல் பணியாற்றி இந்திய கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் வழக்கறிஞர் சி. ராபர்ட் புரூஸ் அவர்களை சுமார் 1,65,000ம் வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற உழைத்த அனைவருக்நகும் ன்றிகளை யும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும்.

இந்திய திருநாட்டின் நீதி பரிபாலனத் திற்கும்,மாநில சுயாட்சிக்கும்,மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், எதிரானதும்,அரசியல் அமைப்பிற்கு எதிரான, ஜனநாயகத்திற்கு விரோதமான, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் கடந்த 1.7.2024 தேதி முதல் அமல்படுத்தப்பட்டுள்ள 3 குற்றவியல் சட்ட திருத்தங்களை எதிர்த்து வருகின்ற 27.7.2024 சனிக்கிழமை அன்று மாலை 4 மணியளவில் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் தென் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் திருநெல்வேலி, தென்காசி,தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கழக வழக்கறிஞர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

இந்த கருத்தரங்கம் நிகழ்ச்சியில் கழக சட்டத் துறை தலைவர், செயலாளர், நிர்வாகிகள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

இந்த கருத்தரங்கத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.வழக்கறிஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# நன்கொடை பத்திர வழக்குகள்!

## வரும் 22 ஆம் தேதி விசாரிக்கப்படும்!

புதுடெல்லி, ஜூலை 20 -

தேர்தல் நன்கொடை பத்திர முறை சட்டவிரோதமானது என்றுகூறி அதனை ரத்து செய்து, கடந்த பிப்ரவரி மாதம் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான அமர்வு தீர்ப்பளித்தது.

உச்சநீதிமன்றத்தின் தொடர்ச்சியான கண்டனங்கள் எதிரொலியாக தேர்தல் பத்திர விவரங்களை பொதுத்துறை நிறுவனமான எஸ்பிஐ வங்கி வெளியிட்டது. அதன்பிறகு, தேர்தல் நன்கொடை மூலம் பெரும் ஊழல் நடந்துள்ளதாக உச்சநீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.

தேர்தல் நன்கொடை மூலம் பலன் பெற்றவர்களின் ஊழல் விவகாரங்களை சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனுவை அவசரமாக விசாரிக்க மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வில் முறையிட்டுள்ளார். அப்போது தேர்தல் பத்திரங்களுக்கு எதிரான வழக்குகள் அனைத்தும் வரும் 22 ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பன்னாட்டு கல்வி நிறுவனங்களில் தேர்வாகி பயின்று வரும் அரசுப் பள்ளி மாணவர்களைச் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். தைவான் Ming Chuan பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் சென்னையைச் சேர்ந்த மாணவி சிந்து, Kun Shan பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஜெயஸ்ரீ, புவனேஸ்வர் ஐ.ஐ.டி.யில் பயின்று வரும் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் ராகுல் ஆகியோரை சந்தித்து அவர்களின் அனுபவங்கள் குறித்து கேட்டறிந்தார். "தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு எப்போதும் துணை நிற்கும்" எனவும் தெரிவித்துக்கொண்டார்.



இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் நடைபெற்ற அனைத்து மீனவர் சங்க அமைப்பு நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம்எம் எல் ஏ, நாகை மாவட்ட கழக செயலாளர் கௌதமன், முன்னாள் அமைச்சர்கள் பா. சத்தியமூர்த்தி, டாக்டர் சுந்தர்ராஜன், மாவட்ட துணை செயலாளர் கருப்பையா மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராபர்ட் ப்ரூஸ், விஜய் வசந்த், ராஜேஷ் குமார் எம்.எல்.ஏ. மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பாகவும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.